[2015 செப்டம்பர் 29

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள்

(பட்டியல்கள் 18 முதல் 22 வரை)@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) தமிழ் இலக்கிய விருதுகள், பாவேந்தர் பிறந்த நாள் விழா, திருக்குறள் மற்றும் ஆத்திச்சூடி மொழிபெயர்ப்பு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்ற பாவேந்தரின் வரிகளுக்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பதைக் குறிக்கோளாகக்கொண்டு எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.*

கடந்த நான்காண்டுகளில் தமிழ் வளர்க்கும் பணிகளுக்காகப் பல திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தால் ஆஸ்திரேலியாவில் அடிலெய்டு நகரில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழ் வளர்த்த சான்றோர்களுக்கு, கபிலர், உவேசா, கம்பர், சொல்லின் செல்வர், உமறுப் புலவர்,

---

@ 262 முதல் 997 வரையிலான பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.